


**28. 10. 2025**

தலைப்பு செய்திகள்

- காலநிலை மாற்ற பாதிப்புகளை எதிர்கொள்ள துரிதமான உறுதியான நடவடிக்கைகளின் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.
- வளர்ச்சியடைந்த தேசமாக நம்நாடு உருவாவதில் தமிழகம் பெரும் பங்காற்றும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
- 3.மின்னணு உற்பத்தியால் நாட்டில் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று மத்திய அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- மோன்தா புயல் காரணமாக திருவள்ளூர் மாவட்டத்தில் இன்று கன, மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
- திருவாரூர் மாவட்டத்தில் நெல்லின் ஈரப்பதம் தொடர்பாக மத்திய குழுவினர் இன்று ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

காலநிலை மாற்ற பாதிப்புகளை எதிர்கொள்ள துரிதமான உறுதியான நடவடிக்கைகளின் அவசியத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு நிகழ்வில் இன்று உரையாற்றியஅவர், இந்தியா உறுதியான நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வாழ்வாதாரமும், ஆற்றலாக சூரியசக்தி திகழ்வதாக குடியரசு தலைவர் எடுத்துரைத்தார்.

மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி உட்பட 124 நாடுகளின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

**குடியரசு துணைத்தலைவர்**

**2047-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த உன்னத** தேசமாக நம்நாடு வளர்ச்சியடையும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3 நாள் அரசுமுறை பயணமாக தமிழகம் வந்துள்ள குடியரசு துணைத்தலைவர் கோவை கொடிசியா வளாகத்தில் நிகழ்ச்சி ஒன்றில் இன்று பேசுகையில் வளர்ச்சியடைந்த தேசமாக நம்நாடு உருவாவதில் தமிழகம் மற்றும் கொங்கு மண்டலத்தின் பங்கு இன்றியமையாததாக இருக்கும் என்று குறிப்பிட்டார்.

கோவைக்கு பல சர்வதேச விமானங்கள் வந்து செல்வதன் மூலம் தொழில் வளம் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டியஅவர், இதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

**.. வாய்ஸ் ..**

தொழில் வளர்ச்சியும், விவசாய வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று சார்ந்தது என்பதால் அதனடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

முன்னதாக கோவை விமான நிலையம் வந்த அவரை மாநில அமைச்சர்கள் திரு. மு.பெ.சாமிநாதன், திரு.முத்துசாமி, பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

❖❖❖❖❖❖

**அஷ்வினி வைஷ்ணவ்**

**நாட்டில் மின்னணு பொருட்கள் உற்பத்தி** வளர்ச்சியால் ஆயிரக்கணக்கான புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று மத்திய மின்னணு தகவல்

தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்வினி வைஷ்ணவ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தேசிய நாளிதழ் ஒன்றில் வெளியான கட்டுரையை தமது சமூக வலைதளத்தில் பதிவுசெய்துள்ள அமைச்சர், மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் நம்நாடு 3-வது இடத்தை பிடித்துள்ளதாக கூறினார்.

நாட்டின் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி சென்றமாதம் 1.8 பில்லியன் டாலராக உயர்ந்து சாதனை படைத்துள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

**கிஷன் ரெட்டி**

**வர்த்தகம் சார்ந்த 14-வது கட்ட நிலக்கரி** சுரங்க ஏலத்தை மத்திய நிலக்கரி துறை அமைச்சர் திரு.கிஷன் ரெட்டி புதுதில்லியில் நாளை தொடங்கி வைக்கிறார்.

இலகுவான வர்த்தகம், முதலீடுகள் மற்றும் தொழில் துறையினரின் பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஏலம் நடத்தப்பட இருப்பதாக நிலக்கரி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த ஏல நடைமுறை கட்டமைப்பின்கீழ் முதல்முறையாக நிலத்தடி நிலக்கரி வாயு பாதைக்கான வசதிகளையும் அமைச்சகம் அறிமுகம் செய்கிறது.

இந்நடவடிக்கையால் நிலத்தடி நிலக்கரி வளங்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

நிலக்கரி ஏலம், மேலாண்மை, பண பரிவர்த்தனை சார்ந்த 2 மின்னணு இணையதள முகப்புகளை அறிமுகம் செய்யவும் அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**வாக்காளர் பட்டியல்**

**தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு** திருத்தம் தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையம் நாளை ஆலோசனை நடத்தவுள்ளது.

தமிழகம் உள்ளிட்ட 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் வரும் 4-ஆம் தேதி தொடங்கவுள்ள நிலையில் இந்த ஆலோசனை முக்கியத்துவம் பெறுகிறது.

வரும் டிசம்பர் 4-ம் தேதி வரை திருத்தபணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி மாதம் 7-ம் தேதி வெளியிடப்படுகிறது.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

போலி வாக்காளர்கள் கண்டறியப்பட வேண்டிய தேவை உள்ளதாகவும், இரட்டை வாக்குகள் அகற்றப்பட வேண்டியது முக்கியம் என்றும் அமைச்சர் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

**மோன்தா புயல்**

**வங்ககடலில் நிலவிய மோன்தா புயல் தீவிர** புயல் சின்னமாக இன்று வலுப்பெற்ற நிலையில் இன்றிரவு காக்கிநாடா அருகே அதிதீவிர புயலாக கரையை கடக்கக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

அச்சமயத்தில் மணிக்கு 100 முதல் 110 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்றும இம்மையம் கூறுகிறது.

இதனிடையே இன்று திருவள்ளூர் மாவட்டத்தில் கன, மிக கனமழையும்,

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, தேனி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் திருநெல்வேலி மலைப் பகுதிகளில் கனமழையும் பெய்யக்கூடும் என்று இம்மையம் தெரிவித்துள்ளது.

**சென்னை மற்றும் செங்கல்பட்டு** மாவட்டத்தின் பல்லாவரம், குரோம்பேட்டை, வேளச்சேரி, காட்டாங்குளத்தூர், மறைமலைநகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில மிதமான மழை பெய்து வருகிறது. இதனால் இயல்புவாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**தர்மபுரி**

**ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து** குறைந்ததையடுத்து, அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க மாவட்ட நிர்வாகம் இன்று அனுமதி அளித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**கும்பக்கரை**

**தேனி கும்பக்கரை அருவியில்** வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் விதித்த தடை 18-வது நாளாக இன்றும் நீடிக்கிறது.

நீர்வரத்து சீராகும் வரை இந்த தடை தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**சேலம்**

வடகிழக்கு பருவமழையால், சேலம் மாவட்டத்தில் 46 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**செம்பரம்பாக்கம்**

**நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்மழையால்** செம்பரம்பாக்கம் ஏரிக்கு நீர்வரத்து ஆயிரத்து 800 கனஅடியாக அதிகரித்துள்ளது.

அடையாறு ஆற்றில் வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு 750 கனஅடியாக தொடர்கிறது.

❖❖❖❖❖❖

**மத்திய குழுவினர் ஆய்வு**

**திருவாரூர் மாவட்டம் கோவில் வெண்ணி** பகுதியில் மத்திய குழுவினர் நெல்லின் ஈரப்பதம் தொடர்பாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

மத்திய தானிய சேமிப்பு மேலாண்மை நிறுவனத்தின் துணை இயக்குநர் திரு.பி.கே.சிங் தலைமையிலான இக்குழுவினர், விவசாயிகளின் குறைகளையும் கேட்டறிந்தனர்.

தொடார்ந்து நெல் மாதிரிகளையும் சேகரித்து எடுத்துச்சென்றனர்.

❖❖❖❖❖❖

**தமிழக வர்த்தக மாநாடு**

**தமிழகத்தின் பாரம்பரிய பொருட்களை** பிரபலப்படுத்தும் வகையில் மலேஷியாவில் சர்வதேச தமிழக வர்த்தக மாநாடு வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

விருதுநகரில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த வர்த்தக சங்க பிரதிநிதிகள் பாரம்பரிய உணவுப்பொருட்களை மீட்டு உலகெங்கிலும் பிரபலப்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்தனர்.

வெளிநாடுவாழ் தமிழர்களின் இல்லந்தோறும் தொழில்முனைவோரை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டனர்.

தமிழ்நாட்டில் பாரம்பரிய மூலிகை பொருட்கள் தயாரிப்பில் சிறந்துவிளங்கும் 55 தொழில்முனைவோர் இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

சிறப்பு கண்காட்சியும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**சர்தார் வல்லபாய் பட்டேல்**

**சிவகங்கை மாவட்டத்தில் வரும் 31-ம் தேதி** சர்தார் வல்லபாய் பட்டேலின் 150-வது பிறந்த நாளை குறிக்கும் வகையில் ஒற்றுமை அணிவகுப்பு நடைபெறும் என்று மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பிரவீன்குமார் தெரிவித்துள்ளார்.

கல்லூரி மாணாக்கர், இளையோர், விளையாட்டு வீரர்கள், முதியோர் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்து தரப்பினரும் பங்கேற்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

இந்நிகழ்வை ஒட்டி பட்டேலின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் போட்டிகளும், சொற்பொழிவுகளும் இடம்பெறும் என்றார்.

**இதேபோல் வேலூர் அருகே சேர்காட்டில் திருவள்ளுவர்** பல்கலைக்கழகத்தில் தேசிய ஒற்றுமை பாதயாத்திரையில் 500-க்கம் மேற்பட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

❖❖❖❖❖❖

**கோவில்**

**பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி** திருக்கோவிலில் கந்த சஷ்டி விழாவின் நிறைவான திருக்கல்யாண உற்சவம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖

**கூடைப்பந்து**

**தூத்துக்குடி மாவட்டத்தில் கல்லூரிகளுக்கு** இடையிலான அகில இந்திய கூடைப்பந்தாட்ட போட்டிகள் நாளை தொடங்குகிறது.

5 நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் வெற்றிபெறும் அணிகளுக்கு ரொக்கப்பரிசுகளும் கோப்பையும் வழங்கப்படவுள்ளன.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖